யான தொகை ரூ. 2,78,339 என்றும், ஓவர் ட்யூ தொகை ரூ. 1,32,719 என்றும், 32.04 சதவிகிதம் என்றும் விவரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

ஆக, இருவரும் கொடுத்திருக்கிற ஆதாரங்களைப் பார்த்து, இதன் மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைப்பற்றி முடிவு கூற, பிறிதொரு நாளைக்கு நான் இதை எடுத்துக்கொள்கிறேன்.

3. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

(அ) நெல்லை–குமரி மாவட்டங்களுக்கிடையே பயணம் செய்ய மாணவர்களுக்கு அளித்துவந்த கட்டணச் சலுகை நிறுத்தப் பட்டதும், அதன் விளைவுகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்தபடியாக, திரு. நா. சௌந்தரபாண்டியன் அவர்கள் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்—

"The unrest among the students due to cancellation of the concession ticket for the travel from Tirunelveli district to Kanyakumari district by the Joint Director of Transport, Kanyakumari Branch."

என்ற பொருள்பற்றி விவாதிக்க வேண்டும் என்று தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி பேரவையின் பிற அலுவல்களை ஒற்றிவைப்பதற்கு உரியது என்பதைச் சுருக்கமாகக் கூறும்படி, திரு. நா. சௌந்தரபாண்டியன் அவர்களை அழைக்கிறேன்.

திரு. நா. சௌந்தரபாண்டியன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகிறார்கள். இந்த மாவட்டங்களில் 1967-ம் வருடத்திலிருந்து ட்ரான்ஸ்போர்ட் பஸ் வழித்தடங்கள் ஏற்பட்ட நேரத்தில் திருநெல்வேலி மாவட்டத் திலுள்ள எல்லா மாணவர்களுக்கும் கட்டணச் சலுகை அளிக்கப் பட்டு வந்தது. கடந்த 3 மாதங்களுக்கு முன்பு ஜாயின்ட் டைரக்டர் அவர்கள் இப்படிப்பட்ட கட்டணச் சலுகையை நிறுத்தி யிருக்கிறார்கள். இதனால் ஐந்நூறுக்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்களும், உயர்நிலைப்பள்ளி மாணவர்களும் படிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக ஏழை எளிய மாணவர்கள் தங்களுடைய படிப்பை நிறுத்திவிடக்கூடிய நிலைமை இருந்துவருகிறது. ஏழை, எளிய பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளைத் தொடர்ந்து படிக்க வைக்க முடியாத நிலைமை ஏற்பட் டிருக்கிறது. இது மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் கவலையை உண்டாக்கி வருகிறது. இதன் காரணமாகத் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மாணவர்கள் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கிறார்கள். ஆகவே, இந்த மாதிரி கிளர்ச்சி ஏற்படுவதைத் தடுப்பதற்காக கல்லூரி மாணவர்களுக்கும் உயர் நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் தொடர்ந்து கட்டணச் சலுகை

வழங்குவதுதான் நியாயம் என்று தெரிகிறது. இப்போது கன்னியா குமரி மாவட்டத்தில் படிக்கக்கூடிய மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் திருநெல்வேலி மாவட்டத்து மாணவர்களுக்கு இந்தக் கட்டணச் சலுகை மறுக்கப்படுவது வருந் தத்தக்கதாகும். திருநெல்வேலி மாவட்ட எல்லையிலிருந்து கன்னியா குமரி மாவட்டத்தில் பத்துப் பதினைந்து மைல் தூரத்திற்குள் கல்லூரிகள் இருக்கின்றன. ஆனால் திருநெல்வேலி மாவட்டத்தில் 50 மைல் தூரத்தில்தான் கல்லூரி இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மாணவர்கள் அகஸ்தீஸ்வரம், நாகர்கோயிலில் உள்ள கல்லூரிகளில் படிப்பதன் காரணமாகக் கட்டணச் சலுகை தொடர்ந்து அளிப்பது நியாயம். மாணவர்களுக்கு இந்தக் கட்டணச் சலுகையை அளிக்க வேண்டும். இதற்காக அங்குள்ள மாணவர்கள் ஒரு பெரிய கிளர்ச்சியை நடத்தத் திட்டமிட்டிருப்பதால், அது குறித்து விவாதிக்க இந்தப் பேரவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை திருவாங்கூர்—கொச்சி மாநிலத்தின் நிர் வாகத்தில் இருந்தபோது மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை கொடுக்கப்பட்டு வந்தது. நமது அரசு போக்குவரத்துத் துறையை ஏற்றுக்கொண்டபோது, அந்தக் கட்டணச் சலுகை தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்டத்தின் மாணவர்களுக்கும் கொடுக்கப்பட்டு வந்தது. இந்தக் கட்டணச் சலுகையால் நமக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6 லட்சம் இழப்பு ஏற்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத் தில் மொத்த மதிப்பு 12 லட்சம் ரூபாய் கட்டணச் சலுகை அளிக்கப் படுகிறது. ஏற்கெனவே இந்தச் சலுகை திருவாங்கூர்—கொச்சி மாநிலத்தில் கொடுக்கப்பட்டு வந்தது. 1967-ல் திருநெல்வேலி மாவட்டத்தில் அரசுடைமைக் கொள்கையை விரிவுபடுத்தப்பட்ட போது, அந்த மாவட்டத்தில் இந்த வழித்தடங்களிலும் மாணவர் களுக்குக் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டது. ஆனால் இந்தக் கட்டணச் சலுகை சரியல்ல என்று ஆடிட் அப்ஜெக்ஷன் கூறியிருக்கிற காரணத்தால் இந்தச் சலுகை நிறுத்தப்பட்டது. ஆடிட் அப் ஜெக்ஷன் செய்திருக்கிறார்கள். அதற்கு விளக்கம் கொடுக்க வேண்டி யிருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் கிளர்ச்சி என்று பயமுறுத்துகிறார்கள். இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் 6 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களுக்கும், திருநெல்வேலி மாவட்டத்தில் 280 மாணவர்களுக்கும் கொடுத்த சலுகையை ஆடிட் அப்ஜெக்ஷன் செய்திருக்கிறது. கனம் உறுப்பினர்கள் இதை அறிந்து கொள்ள வேண்டும்.

எனவேதான் அதனைப் பரிசீலனை செய்ய வேண்டிய கட்டத்தில் அதிகாரிகள் இருக்கிறார்கள். பரிசீலித்த பிறகுதான் இதுபற்றி முடிவு செய்யப்படும் என்று தெரிவித்து இதுபற்றிய ஒத்திவைப்புக்கு அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனு மதி தர மறுக்கிறேன்.